<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**In the Court of Judicial Magistrate No.II, Mettur**</u>

**Case No : C.C. 667/2024**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 26.03.2026.**

| | |
|---|---|
| **Name : ரமணி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

1) 3ம் எதிரி என் கணவர் ஆவார். மற்ற இருவரும் மாமனார், மாமியார் ஆவார்கள். நாங்கள் தற்போது சேர்ந்து வாழ்ந்து வருகிறோம். நானும் எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டோம். நான் தற்போது 3ம் எதிரியுடன் தான் வசித்து வருகிறேன். நான் தனியாக இருக்கும் போது என் மாமனார் யுவராஜ் என்பவர் என் வயிற்றை தொட்டு தவறாக நடந்து கொள்ள முயற்சி செய்தார் என்றால் இல்லை. அடிக்கடி எனக்கும் என் கணவருக்கும் சண்டை வந்தது என்றால் இல்லை. என் கணவர் குடித்துவிட்டு என் மகனை கேட்டு இரவு வேளையில் தகராறு செய்தார் என்றால் இல்லை. என் பெற்றோர்களை தெவிடியா பையா, கண்டார ஒலி என்று சொல்லி பேசினார் என்றால் இல்லை, என் தம்பி சித்தேஷ்வரனை என் கணவர் கையில் தலைகவசம் வைத்து அடித்தார் என்றால் இல்லை.

2) என் கணவர் என்னை தெவிடியா என்று திட்டினார் என்றால் இல்லை என் மாமனார் என் செல்போனிற்கு பாலியல் தொந்தரவு கொடுக்கும் வகையிலான குறுஞ்செய்திகளை அனுப்பி வந்தார் என்றால் இல்லை. பிறகு நான் ஜலகண்டாபுரம் காவல் நிலையம் சென்று எழுத்து மூலமான புகார் கொடுத்தேன் என்றால் சந்தேகத்தின் பேரில் கொடுத்தேன். புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியாது.

தனிக்குடித்தனம் செல்லலாம் என்று என் கணவரிடம் சொல்லிய போது அவர் கேட்க மறுத்துவிட்டார் என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.03.26 16:05:22 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 667/2024**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 26.03.2026.**

| | |
|---|---|
| **Name : வளர்மதி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) நானும் எதிரியும் சமாதானம் ஆகிவிட்டோம். என் மகளும், 3ம் எதிரியும் தற்போது சேர்ந்து வாழ்ந்து வருகிறார்கள் என்றால் ஆமாம். என் மகள் தனியாக இருக்கும் போது யுவராஜ் என்பவர் என் மகள் வயிற்றை தொட்டு தவறாக நடந்து கொள்ள முயற்சி செய்ததாக என் மகள் சொன்னார் என்றால் இல்லை. இதனால் மன உளைச்சல் ஏற்பட்டதாக சொன்னார் என்றால் இல்லை. பிறகு என் மகள் என் வீட்டிற்கு வந்த பிறகு ஒரு நாள் என் மருமகன் குடித்துவிட்டு பேரனை கேட்டு இரவு வேளையில் தகராறு செய்தார் என்றால் இல்லை. என்னையும், என் கணவரையும் தெவிடியா பையா, கண்டார ஒலி என்று சொல்லி பேசினார் என்றால் இல்லை. எதிரி சதீஷ்குமார் என் மகளை தெவிடியா என்று திட்டினார் என்றால் இல்லை. பிறகு என் மகள் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தார் என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.03.26 16:05:27 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 667/2024**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 26.03.2026.**

| | |
|---|---|
| **Name : செந்தில்குமார்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—</u>**

1) கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக மாலை 4 மணிக்கு வளர்மதி வீட்டிற்கு வந்து ஜலகண்டாபுரம் போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள் என்றால் இல்லை. அதில் நான் மற்றும் மற்றொருவர் கையொப்பம் செய்தோம் என்றால் இல்லை.

2) மகஜரில் உள்ள விவரம் எனக்கு படித்து காண்பித்தார்கள் என்றால் இல்லை. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக மாலை 4 மணிக்கு செல்போன் ஒன்றை என் முன்பாகவும், மற்றொரு நபர் முன்பாகவும் போலீசார் மகஜர் வாயிலாக கைப்பற்றினார்கள் என்றால் இல்லை. போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் காவல் நிலையத்தில் வெற்று தாளில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.03.26 16:05:32 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 667/2024**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 26.03.2026.**

| Name : சித்தேஷ்வரன் | Taluk : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து பைனான்சில் வேலை செய்கிறேன். அ.சா.1 என் சகோதரி ஆவார். 3ம் எதிரி என் சகோதரியின் கணவர் ஆவார். கடந்த 2024ம் வருடம் அ.சா.1 மற்றும் எதிரிகளுக்கு இடையே குடும்ப பிரச்சனை ஏற்பட்டதாக சொன்னார்கள். வேறு ஒன்றும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

2) கடந்த 02.05.2024ம் தேதி இரவு 11.00 மணியளவில் அ.சா.1 ன் கணவர் குடிபோதையில் எங்கள் வீட்டிற்கு வந்து குழந்தையை கேட்டு தகராறு செய்தாரா என்றால் இல்லை. அ.சா.1யும் என் பெற்றோரையும், என்னையும் கெட்ட வார்த்தையால் பேசி குழந்தையை கேட்டு அடித்தாரா என்றால் இல்லை. தற்போது அ.சா.1 மற்றும் மூன்றாம் எதிரி தனிக்குடித்தனமாக ஒன்றாக வாழ்ந்து வருகிறார்கள் என்றால் ஆமாம். சமாதானம் ஆகிவிட்டோம் என்றால் ஆமாம்.

நானும், எதிரியும் சமாதானம் ஆகிவிட்டோம் என்றால் சரிதான். சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.03.26 16:05:37 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 667/2024**

**Prosecution witness : அ.சா. 6** **Date : 26.03.2026.**

| | |
|---|---|
| **Name : மோகன்குமார்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை

1) நான் தற்பொழுது ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் புலன் ஆய்வு செய்த புலனாய்வு அதிகாரி திரு.மாதுராஜ், காவல் உதவி ஆய்வாளர் தக்க சமயத்தில் சாட்சியம் அளிக்க இயலாத காரணத்தால் அவர் சார்பாக ஆவணத்தின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 07.05.2024–ம் தேதி ஜலகண்டாபுரம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளர் மாதுராஜ் நிலையப் பொறுப்பில் இருந்த போது, ரமணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.82/2024 u/Sec. 294(பி), 323, 354(A), 509, 506(1) IPC r/w section 4 of TNPHW Act** ஆக வழக்கு பதிவு செய்தார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 4** ஆகும்.

3. பிறகு புலன் விசாரணை அதிகாரி புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 07.05.2024 ம் தேதி மதியம் 2 மணிக்கு சம்பவ இடம் முனியப்பன் கோவில் வீது வாதி வளர்மதி வீட்டு முன்பாக சென்று சாட்சிகள் செந்தில்குமார் மற்றும் அரவிந்த் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். வரைபடம் **அ.சா.ஆ 5** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் ரமணி, குமரேசன், சித்தேஸ்வரன், அரவிந்த், வளர்மதி, ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். கடந்த 07.05.2024 ம் தேதி மாலை 04.40 மணிக்கு சாட்சிகள் அரவிந்த் மற்றும் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக 9095071716 என்ற செல்போன் எண்ணுள்ள Airtel சிம்முடன் கூடிய Realme narzo செல்போன் ஒன்று IMEI No.866805051448699 2) 866805051448681 கைப்பற்றப்பட்டது. கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.6** ஆகும். படிவம் 95 இரண்டு பக்கங்கள் **அ.சா.ஆ.7** ஆகும். 9095071716 என்ற செல்போன் எண்ணுள்ள Airtel சிம்முடன் கூடிய Realme narzo செல்போன் ஒன்று **சா.பொ.3** ஆகும்.

5. இவ்வழக்கின் 3ம் எதிரி கடந்த 07.05.2024 ம் தேதி ஆகியோர் கைது செய்யப்பட்டு தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்கு உட்படுத்ப்பட்டனர். மற்ற எதிரிகள் கடந்த 17.05.2024–ம் தேதி மாண்புமிகு மாவட்ட நீதிமன்றதில் முன்ஜாமீன் பெற்றதால் கைது செய்ய மார்கமில்லை.

6. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 18.05.2024ம் தேதி **நி.கு.எண்.82/2024 u/Sec. 294(பி), 323, 354(A), 509, 506(1) IPC r/w section 4 of TNPHW Act லிருந்து u/Sec. 294(பி), 354(A), 509, 506(1), 352 IPC r/w section 4 of TNPHW Act** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார். பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.8** ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.**

7. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்குக்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. புலன் விசாரணை ஒரு தலைபட்சமானது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.03.26 16:05:42 +0530

Judicial Magistrate No.II,
Mettur.